# NEWBEC

NEW WAY OF BEING CHURCH

19 ஜனவரி 2025

பொதுக்காலம் ஆண்டின் 2 ஆம் ஞாயிறு (கிறிஸ்துவ ஒற்றுமைக்காக இறைவேண்டல் ஞாயிறு)

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**


### மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

திருஅவை - இரக்கத்துடன் இருக்க அழைப்பு

# அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்

இன்றைய வாசகங்களில் திருமணத்தைப் பற்றிய காட்சிகள் நம்மைக் கவர்கின்றன. எசாயா 62 இல் புலம்பெயர்ந்த மக்கள் பாபிலோனில் வெறித்து அமர்ந்திருப்பதைக் காட்டுகிறது. இறைவாக்கினர் மக்களை இவ்வார்த்தைகளால் ஆறுதல்படுத்துகின்றார். உன்னை எழுப்பியவர் உன்னை மணந்துகொள்வார்; மணமகன் மணப்பெண்ணில் மகிழ்வதுபோல் உன் கடவுள் உன்னில் மகிழ்வார்.. சுருங்கச்சொல்வதென்றால், கடவுள் தம் மக்களை மீட்டெடுப்பார் என்றும் அவர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை மீண்டும் நிலைநாட்டுவார் என்றும் உறுதியளிக்கிறார்.



தம்முடைய மக்களுடன் கடவுளின் உடன்படிக்கையை நிறைவேற்றும் நம் ஆண்டவர், கானாவூரில் நடந்த திருமணத்தின்போது தனது தெய்வீகத்தன்மையைக் காட்டுகின்றார். அவர் தனது தாய், 'திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது' என்று கூறுவதைக் கேட்கிறார். மீட்பின் வரலாற்றில் பரிந்துரையாளரான மரியாவின் பங்கைக் கவனியுங்கள். **அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள் என்று பணியாளர்களிடம் சொல்லும் மரியா, நம்மையும் அவ்வாறே செய்யும்படி தூண்டுகிறார்.**

திருமணக் காட்சிகள் நடந்தேறிக்கொண்டிருக்கும்போது, மரியாவின் வார்த்தையைக் கேட்டப் பெயர் குறிப்பிடப்படாத பணியாளர்களின் பங்கைப் பற்றிச் சிந்திக்காமல் இருக்கமுடியாது. தண்ணீரைச் சுமந்துசெல்லும் அந்த இளையோரின் கதாப்பாத்திரம், மற்றும் நல்ல இரசத்தை இதுவரை பரிமாறாமல் ஏன் வைத்திருந்தீர் என்று மணமகனிடம் (அவர் பெயரும் குறிப்பிடப்படவில்லை) கேட்கும் பந்திமேற்பார்வையாளர் நடந்த அதிசயத்தைக் கவனிக்காமல் இருக்கலாம். ஆயினும் கூட இயேசுவின் முதல் அருளடையாளம் பதிவுசெய்யப்பட்ட நிகழ்வில் அவர்களும் பங்கு கொள்கிறார்கள்.

இன்று அந்த மணவாளன் இயேசு தான் என்று நாம் அறிவோம். அவர் ஆட்டுக்குட்டியின் உணவான ஆண்டவரின் விருந்தைத் தொடங்குவதற்காக வந்துள்ளார். திருமுழுக்குப் பெற்று உடன் வாரிசுகளான அவரின் மகனும் மகளுமாகிய நமக்குக் கொடுக்கப்பட்ட மிகச் சிறந்த திராட்சை இரசம் தூய ஆவியார் என்னும் கொடைதான். நமக்கு இயேசுவின் கதைகள் உள்ளன. திருப்பாடல் ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார். பிற இனத்தாருக்கு அவரது மாட்சியை எடுத்துரையுங்கள்; அவர் தரும் மீட்பை நாள்தோறும் அறிவியுங்கள். புனித பவுல் அருள் கொடைகள் பலவகையுண்டு, ஆனால் தூய ஆவியார் ஒருவரே. திருத்தொண்டுகளும் பலவகையுண்டு. ஆனால் ஆண்டவர் ஒருவரே, செயல்பாடுகள் பலவகையுண்டு ஆனால் கடவுள் ஒருவரே; அவரே எல்லாரிடமும் எல்லாவற்றையும் செயல்படுத்துபவர் என்று கூறுகிறார்.

நம்முடைய மாறுபட்ட பின்னணி மற்றும் கலாச்சாரங்களைக் கருத்தில் கொண்டு, நம்முடைய கொடைகளைப் பிறரோடுப் பகிர்ந்துகொள்ள நாம் ஒன்றுகூடும்போது, நம்முடைய திருஅவை எவ்வளவு வளமானதாக இருக்கும்? கொல்கொத்தாவின் அன்னை திரேசா இவ்வாறு கூறுகிறார். சிறிய காரியங்களையும் மிகுந்த அன்புடன் செய்யுங்கள். தண்ணீர் நிறைந்த குடங்களை எடுத்துச்செல்லும்போது, 'அவர் சொல்வதெல்லாம் செய்யுங்கள்' என்று அவர் நமக்கும் சொல்கிறார். மற்றதை அவர் பார்த்துக்கொள்வார். தன்னலமற்ற வாழ்க்கை, அது தான் இயேசுவிடம் செல்ல வழி. நம் பரிந்துரையாளரான அன்னை மரியா இயேசுவிடம் நம்மை அழைத்து செல்கிறார்.

> நான் விண்ணக அரசி மட்டுமல்ல; ஆனால், உங்களின் தாய், இரக்கத்தின் தாயும் கூட.
>
> புனித ஃபாஸ்டினாவின் நாட்குறிப்பு 330

### இன்றைய இறைவார்த்தை:

எசாயா 62: 1-5

திருப்பாடல்: 96: 1-3, 7-10

1 கொரி: 12: 4-11

யோவான் 2: 1-11


INTERNAL CIRCULATION ONLY
BUL 03/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org